4. விதி 110—ன்கீழ் அறிக்கை

நபார்டு வங்கி உதவியுடன் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடியாகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன்மூலம், வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.*

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளைப்

2011 ஆகஸ்ட் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொருட்களுக்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளைப் பொருட்களின் விலை வீழ்ச்சி அடையும்போது, விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக்கொள்வதுடன், விலை ஏற்றத்தின்போது விளைப் பொருட்களைக் கிடங்கிலிருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.

நடப்பாண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போதுள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில், மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், 1 இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும்.

முற்பகல் 11-55

இதன்மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால்

விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மனநிறைவுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை—*தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

***திரு. ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு! வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு!' என்ற பொன்மனச் செம்மலின் பாடல் வரிகளுக்கேற்ப, தமிழக மக்களின் எண்ணங்களின் செயல்வடிவமாய்த் திகழ்ந்து, நாடு வாழ, நாட்டு மக்கள் வாழ, நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்களுக்காகவே எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, வாழும் காலத்திலேயே வரலாறாகி, சாதனைகள் பல செய்து, சரித்திரம் படைத்திட்ட பொன்மனத் தலைவி, மனிதர்குல மாணிக்கம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையில் என்னைப் பேச வைத்த தாயுள்ளம் கொண்ட எங்கள் தங்கத் தலைவிக்குக் கோடானு கோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.*